*கவனிக்க.- 2015.09.11 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1933 - 2015 සැප්තැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2015.09.18

*1933 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1436 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1446 |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின்
தொழில்நுட்பமல்லாத முகாமைத்துவ உதவியாளர் தொகுதி-2
சேவை வகுதிக்குரிய அலுவலக முன்மேசை அலுவலர்
பதவிக்கான விண்ணப்பம் கோரல்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்பமல்லாத தொகுதி - 2 சேவை வகுதியின் தரம் III முன்மேசை அலுவலர் பதவிக்காகப் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள், ''உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இல. 155, சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை, கொழும்பு 2'' எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளிட்டு அனுப்பும் அஞ்சலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அலுவலக முன்மேசை அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2015'' எனக் குறிப்பிட்டு அதனை பதிவுத் தபாலில் 2015.10.19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது. அத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வெளியிடப்படவும் மாட்டாது.

3. **வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல்.**- வெற்றிடமாகவுள்ள அலுவலக முன்மேசை அலுவலர் பதவி எண்ணிக்கை ஒன்றாகும்.

4. **சம்பளத் திட்டம்.**- பதவிக்குரிய சம்பள முறை.- ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூபா 22,040 (MN 1 - 2006A).

5. **தகைமைகள் :**

(அ) **கல்வித் தகைமைகள் :**

(1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆகக்குறைந்தது சாதாரண பொதுப் பரீட்சை தவிர ஒரு பாடத்திலாவது (1) சித்தியடைந்திருத்தல்.

(ஆ) **தொழில் தகைமைகள் :**

(1) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தட்டச்சு மற்றும் அடிப்படைக் கணினி அறிவு தொடர்பான பாடநெறி ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் ;

(2) ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் சரளமாக உரையாடும் ஆற்றல் இருத்தல் வேண்டும். தமிழ் மொழி, விண்ணப்பதாரியின் ஊடக மொழி அல்லாத விடத்து, பேச்சுத் தமிழ் மொழியில் ஆற்றல் இருப்பது விசேட தகைமையாகக் கருதப்படும் ;

(3) **அனுபவம்.**- குறிப்பிட்ட துறையில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும் ;

(4) **உடற் தகைமைகள்.**- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றவும், பதவியின் கடமையினை நிறைவேற்றிட போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கிய முடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(5) **ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

**வயது.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 (பதினெட்டு) வயதுக்குக் குறையாதவராகவும் 30 (முப்பது) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை.**- விண்ணப்பப்படிவங்களின்படி தகைமையுடைய விண்ணப்பதாரிகளுக்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப் படும் பரீட்சைச் சபையொன்றினூடாக பதவி தொடர்பாகக் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு, அப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப் படும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப அலுவலக முன்மேசை அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

7. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| பரீட்சித்துப் புள்ளி வழங்கப்படும் தலைப்பு | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழிற் தகைமைகள் | 25 |
| மேலதிக அனுபவம் | 25 |
| மொழி ஆற்றல் | 15 |
| கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆற்றல் | 10 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள் | 05 |
| மொத்தம் 100 | |

8. **பொய்யான தகவல் வழங்கல்.**- விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்கள் வழங்கப்படுதல்

வேண்டும். பொய்யான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப் பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நியமன அதிகாரி மூலம் அவரது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப் படலாம். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் எச்சந்தர்ப்பத்திலேனும் பொய்யானவை எனத் தெரியவருமிடத்து, அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

9. **நியமன நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்து கொண்டது. விதவைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்** :

(அ) இப்பதவி மூன்று வருட தகுதிகாண் கால எல்லைக்குட்பட்டது ;

(ஆ) நியமனம் பெற்று மூன்று வருட காலத்தினுள் முதலாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை யில் சித்திபெறல் வேண்டும் ;

(இ) அரச சேவையின் நியமனங்களைக் கட்டுப் படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் அரச சேவை ஆணைக்குழுவின் இல. PSC/EST/3/1/2/3/2013 மற்றும் 2014.08.14 ஆந் திகதிய அனுமதியளிக்கப்பட்ட அலுவலக முன்மேசை அலுவலர் ஆட்சேர்ப்பு நடைமுறையின் ஏற்பாடுகளுக்கும் அதில் எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்ட வகையில் அலுவலக முன்மேசை அலுவலர் பதவிக்கு நியமனம் வழங்கப்படும்.

11. **தெரிவுசெய்யப்படும் முறைமை**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் காணப்படும் வெற்றிடங் களுக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

12. **அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்**.- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2014.01.21 ஆந் திகதி வெளியிடப்பட்ட 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கும் அதன் நேர் எதிர் விளைவான சுற்றறிக்கைகளுக்கும் இணங்க சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் சேவையில் இணைந்து 5 வருட காலத்திற்குள் சேவை யில் இணைந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெறல் வேண்டும்.

13. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) **விண்ணப்பப்படிவம் தயாரித்தல்**.- இவ்வறி வித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக விண்ணப் பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப் படும்.

சாதாரண போட்டோ கொப்பி (21 x 29 cm/8.5" x 12"/A4) தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவம் தயாரித்தல் வேண்டும் ;

(ஆ) **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பப்படிவத்தில் விண் ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை யொன்றின் அதிபர், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அத்தியட்சகர் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர், வருடமொன்றுக்கு 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேல் அடிப்படைச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரச பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண் டும். அரச/மாகாண அரச சேவையிலுள்ள ஒருவரெனில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி அறிவித்தலி லுள்ள பொதுவான சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படும் கடமைப்பாட்டைக் கொண் டுள்ளனர்.

**குறிப்பு**.- நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரி களுக்கு பிரயாணச் செலவுகள் அல்லது ஏனைய செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

கல்யாணி தஹநாயக்க,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
2015, ஓகத்து 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அலுவலக முன்மேசை அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2015**

1. (அ) முதலெழுத்துக்களை பின்னால் இட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உ-ம் : (GUNAWARDHANA - M. G. B. S. K.)

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. (அ) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

(ஆ) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(இ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :----.

3. பால் (ஆண்/பெண்) :
பெண்-1, ஆண்-0 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :
விவாகமாகாதவர்-1
விவாகமானவர்-2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

6. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் வயது : (2015.................)

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

8. பிரசாவுரிமை (பரம்பரையினாலா/பதிவின் மூலமா என்பது) : ----.

9. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

10. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா. த.) பரீட்சை :

(i) பரீட்சை ஆண்டு :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :

(i) பரீட்சை ஆண்டு :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. தொழிற் தகைமைகள் :----------------------------------------
----------------------------------------------------------------
----------------------------------------------------------------
----------------------------------------------------------------

12. அனுபவம் :----------------------------------------
----------------------------------------------------------------
----------------------------------------------------------------
----------------------------------------------------------------

13. நீங்கள் அரசாங்க சேவையில் ஒழுக்காற்றுக் காரணங்களுக்காக சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக அல்லது ஏதேனும் தவறு தொடர்பாக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் அது பற்றிய சகல விபரங்களையும் தரவும் :--------------------------
----------------------------------------------------------------
----------------------------------------------------------------
----------------------------------------------------------------

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(i) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகிறேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது சரியாகப் பூர்த்தி செய்யாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப் பூர்த்தி செய்திருப்பதனாலும் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும், இதில் எல்லாப் பகுதிகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) என்னால் இங்கு தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

(iii) விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலிலுள்ள அனைத்து விடயங்களையும் நன்கு வாசித்து விளங்கிக் கொண்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் சட்ட திட்டங்களுக்கும் உடன்படுவதாகவும் வெளிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினையிட்டு உறுதிப்படுத்தவும்)

16. **திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் உறுதியுரை :**
திரு./திருமதி/செல்வி ..........................................................
இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரின் சேவை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும்,

இப்பகுதிக்குரிய அறிவித்தலின்படி இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார் என்றும், அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்.)

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினையிட்டு உறுதிப்படுத்தவும்)

9-304/1

---

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆரம்ப நிலை ஊழியர்கள் வகுதி (PL2-2006) தச்சுத் தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

ஆரம்ப நிலை ஊழியர் மட்டத்திலான தச்சுத் தொழிலாளர் பதவிக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக அமையப்பெற்ற விண்ணப்பப்படிவங்கள், ''உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இல. 155, சேர். சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு 2'' எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளிட்டு அனுப்பும் அஞ்சலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அலுவலக தச்சுத் தொழிலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2015'' என்றவாறு குறிப்பிட்டு அதனை பதிவுத் தபாலில் 2015.10.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக மேலே குறிப்பிட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கத் தக்கதாக அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது. அத்துடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வெளியிடப்படவும்மாட்டாது.

3. **வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல்.**- வெற்றிடமாகவுள்ள அலுவலக தச்சுத் தொழிலாளர் பதவி எண்ணிக்கை 1.

4. **சம்பளத் திட்டம்.**- பதவிக்குரிய சம்பள முறை.- ரூபா 12,210 - 10 x 130 - 11 x 160 - 12 x 170 - ரூபா 18,600 (PL 2 - 2006A).

5. **தகைமைகள் :**

5.1 **கல்வித் தகைமைகள் :**

(1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆகக்குறைந்தது ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருப்பது அவசியமாகும் ;

5.2 **தொழில் தகைமைகள் :**

5.2.1 தச்சு வேலை தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டவாறு ஆகக்குறைந்தது தேசிய தொழில் பயிற்சித் தகைமையின் மட்டம் 2 க்குரிய முழுநேரப் பாடநெறியொன்றைப் பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் ;

5.2.2 **அனுபவம்.**- கம்பனிச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தச்சுத் தொழிலாளர் பதவியொன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

5.3 **உடற் தகைமைகள்.**- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றவும், பதவியின் கடமையினை நிறைவேற்றிட போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

5.4 **ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iv) இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு ஆண் விண்ணப்பதாரிகள் மாத்திரமே தகுதி பெறுகின்றனர்.

5.5 **வயது.**- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 (பதினெட்டு) வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை.**- விண்ணப்பங்களுக்கு ஏற்ப தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள், ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் அல்லது ஒரு பரீட்சைச் சபையொன்றினால் நடாத்தப்படும் தொழில்சார் சோதனையொன்றும் தகைமை பெறும் விண்ணப்பதாரர்களுக்காக ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

தொழில்பயிற்சி சோதனை, கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை என்பவற்றில் விண்ணப்பதாரர்கள் பெறும் புள்ளிகளின் ஒழுங்கின்படி, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தச்சுத் தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

*6.1* ***தொழில்சார் சோதனை :***

| பாடங்கள் | காலப்பகுதி | அதிகபட்ச புள்ளிகள் | வெட்டுப் புள்ளிகள் |
|---|---|---|---|
| பாடம் தொழில் சார் சோதனை - தச்சுத் தொழிலாளர் | 1/2 மணித்தியாலம் | 100 | 60% |

6.1.1 பாடத்திட்டம்.- தச்சுப் பொருளொன்றைச் செய்தல், திருத்த வேலையை மேற்கொள்ளுதல் அல்லது பரீட்சிப்பவரினால் குறிப்பிடப்படும் கடமையொன்றை நிறைவேற்றுதல்.

*6.2* ***கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :***

| பரீட்சித்துப் புள்ளி வழங்கப்படும் தலைப்புக்கள் | அதிகபட்ச புள்ளிகள் | வெட்டுப் புள்ளி |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 50 | |
| மேலதிக அனுபவம் | 20 | |
| மேலதிக தொழிற் தகைமைகள் | 25 | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப் படுத்தும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

***குறிப்பு.***- என்னால் அங்கீகரிக்கப்பட்ட முழுமையான புள்ளி வழங்கல் திட்டமொன்றின் அடிப்படையில் மேற்குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்சப் புள்ளிகளின் வரையறைக்கு உட்பட்ட வகையில் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும்.

7. **பொய்யான தகவல் வழங்கல்.**- விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்கள் வழங்கப் படுதல் வேண்டும். பொய்யான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நியமன அதிகாரி மூலம் அவரது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரர்கள் பொய்யான தகவல்களை வழங்கியுள்ளதாகத் தெரியவருமிடத்து, அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

8. **நியமன நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

9. **சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி மூன்று வருட தகுதிகாண் கால எல்லைக்குட்பட்டது ;

(ii) நியமனம் பெற்று மூன்று வருட காலத்தினுள் முதலாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும் ;

(iii) அரச சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2014.03.24 ஆந் திகதிய PSC/EST/4/1/2/1/2012 ஆம் இலக்க அனுமதியளிக்கப்பட்ட தச்சுத் தொழிலாளர் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அதில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கும் அதில் எதிர்காலத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்ட வகையில் தச்சுத் தொழிலாளர் பதவிக்கு நியமனம் வழங்கப்படும்.

10. **அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.**- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2014.01.21 ஆந் திகதி வெளியிடப்பட்ட 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கும் அதன் நேர் எதிர் விளைவான சுற்றறிக்கைகளுக்கும் இணங்க சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் சேவையில் இணைந்து 5 வருட காலத்திற்குள் சேவையில் இணைந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெறல் வேண்டும்.

11. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) ***விண்ணப்பப்படிவம் தயாரித்தல்.***- இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப் படும்.

சாதாரண போட்டோ கொப்பி (21 x 29 cm/8.5" x 12"/A4) தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவம் தயாரித்தல் வேண்டும் ;

(ii) ***விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.***- விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அத்தியட்சகர் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர், வருடமொன்றுக்கு 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேல் அடிப்படைச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரச பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அரச/மாகாண அரச சேவையிலுள்ள ஒருவரெனில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

12. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி அறிவித்தலிலுள்ள பொதுவான சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படும் கடமைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

**குறிப்பு.**- நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பிரயாணச் செலவுகள் அல்லது ஏனைய செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

கல்யாணி தஹநாயக்க,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
2015, ஒகத்து 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தச்சுத் தொழிலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2015**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
உ-ம் : (GUNAWARDHANA - M. G. B. S. K.)

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. (அ) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

(ஆ) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(இ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :----.

3. பால் (ஆண்/பெண்) :
பெண்-1, ஆண்-0 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :
விவாகமாகாதவர்-1
விவாகமானவர்-2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

6. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் வயது : (2015.................)

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

8. பிரசாவுரிமைக (பரம்பரையினாலா/பதிவின் மூலமா என்பது) : ----.

9. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

10. கல்வித் தகைமைகள் :

10.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை - முதல் அமர்வு :

(i) பரீட்சை நடைபெற்ற வருடம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சையின் பெறுபேறுகள் :

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (சா. த.) பரீட்சை - இரண்டாம் அமர்வு :

(i) பரீட்சை நடைபெற்ற வருடம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சையின் பெறுபேறுகள் :

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

10.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை - முதல் அமர்வு :

(i) பரீட்சை நடைபெற்ற வருடம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சையின் பெறுபேறுகள் :

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை - இரண்டாம் அமர்வு :

(i) பரீட்சை நடைபெற்ற வருடம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சையின் பெறுபேறுகள் :

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

11. தொழிற் தகைமைகள் :

| | பயிற்சி நெறியின் பெயர் | நிறுவனம் | காலம் | தேர்ச்சி |
|---|---|---|---|---|
| 1. | ----------- | ----------- | ----------- | ----------- |
| 2. | ----------- | ----------- | ----------- | ----------- |
| 3. | ----------- | ----------- | ----------- | ----------- |

12. அனுபவம் :

| | சேவை நிலையம் | பதவி | சேவைக்காலம் |
|---|---|---|---|
| 1. | ---------------- | ---------------- | ---------------- |
| 2. | ---------------- | ---------------- | ---------------- |
| 3. | ---------------- | ---------------- | ---------------- |

13. நீங்கள் அரசாங்க சேவையில் ஒழுக்காற்றுக் காரணங்களுக்காக சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக அல்லது ஏதேனும் தவறு தொடர்பாக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் அது பற்றிய சகல விபரங்களையும் தரவும் :--------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(i) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகிறேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது சரியாகப் பூர்த்தி செய்யாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப் பூர்த்தி செய்திருப்பதனாலும் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வ தற்கு இணங்குகிறேன். மேலும், இதில் எல்லாப் பகுதி களையும் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) என்னால் இங்கு தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவ னாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் சேவையி லிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

(iii) விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலிலுள்ள அனைத்து விடயங் களையும் நன்கு வாசித்து விளங்கிக் கொண்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் சட்ட திட்டங்களுக்கும் உடன்படுவதாகவும் வெளிப்படுத்து கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ........................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரை பதிக்கப்பட வேண்டும்)

16. **திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் உறுதியுரை :**
திரு./ திருமதி/ செல்வி ........................................................ இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரின் சேவை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும், இப்பகுதிக்குரிய அறிவித்தலின்படி இப்பதவிக்கு விண்ணப்பிப்ப தற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார் என்றும், அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்.)

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரை பதிக்கப்பட வேண்டும்)

9-304/2

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### சட்ட அலுவலர் (நிறைவேற்று உத்தியோகத்தர் தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

**காணி அமைச்சு**

காணி அமைச்சின் சட்ட அலுவலர் பதவிக்கு கீழ்க்காணும் தகைமை களைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றிற்கு உட்படுத்தப்பட்டு, அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். இதன்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இல. 6 இல் குறிப்பிடப் பட்டுள்ளது) புள்ளி வழங்கல் நடைமுறையின் பிரகாரம் கட்டமைக்கப் பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான தகைமைகள் :-**

(i) ***கல்வி/ தொழில்சார் தகைமைகள்.***- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் சட்டமாணிப் பட்டம் பெற்றிருத்தல் ; அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி யொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் ;

(ii) ***அனுபவம்.***- உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான தொழில்சார் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iii) ***உடல், உள ரீதியான தகைமை.***- ஒவ்வொரு விண்ணப்ப தாரியும் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், இப்பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(iv) ***பிற தகைமைகள் :***

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கமுடையவ ராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கடைசித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படு வதற்குத் தேவையான தகைமைகளை சகலவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும் ;

(ii) இப்பதவி மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. சட்ட அலுவலர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (3) வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறை யிலுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும் ;

(iii) அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள், தகுதிகாண் காலப்பகுதியில் உரிய அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். 01/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையினதும், அதனுடன் இணைந்த சுற்றறிக்கை களினதும் பிரகாரம் உரிய மட்டத்திற்குரிய மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) இந்நியமனம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு நடவடிக்கை முறையினதும், தாபன விதிக்கோவையினதும் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டதாகும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம்.**- ரூ. 22,935-10X645-8X790-17X1,050-ரூ. 53,555. (2006.04.25 ஆந் திகதிய 6/2006A ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ்எல்1-2006 சம்பளத் தொகுதி).

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது கீழ்க்காணும் புள்ளி வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| | விடயம் | | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | **மேலதிக கல்வித் தகைமைகள் :**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப் பட்ட சட்டமாணிப் பட்டம் :<br>முதலாம் வகுப்பு சித்தி<br>இரண்டாம் வகுப்பு மேல்நிலை சித்தி<br>இரண்டாம் வகுப்பு கீழ்நிலை சித்தி<br><br>சட்டக் கல்லூரி இறுதியாண்டு முதலாம் வகுப்பு சித்தி<br>சட்டக் கல்லூரி இறுதியாண்டு இரண்டாம் வகுப்பு சித்தி<br><br>**குறிப்பு**.- சிறப்புத் தேர்ச்சி சகிதம் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மட்டும் 10 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>(ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும். பட்டத்திற்கு அல்லது சட்டக் கல்லூரித் தகைமை ஆகிய தகைமைகளுள் ஒன்றிற்கு மட்டும்) | <br><br><br><br>20<br>15<br>10<br><br><br>15<br><br>10 | 20 |
| 2. | **மேலதிக தொழில்சார் தகைமைகள் :**<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை தொடர் பான ஒரு வருடத்திற்குக் குறையாத பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது சட்டமாணிப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறியொன்றிற்காக (ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 5 புள்ளிகள் வீதம்)<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை தொடர் பான 6 மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியொன்றிற்காக (ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 3 புள்ளிகள் வீதம்)<br><br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை தொடர் பான 3 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறியொன்றிற்காக (பாடநெறியொன்றிற்கு 2 புள்ளிகள் வீதம்) | | 15 |

| | விடயம் | | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 3. | **மேலதிக அனுபவம் :**<br>சட்டத்தரணியொருவராக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் பெற்றுக்கொண்டுள்ள அனுபவம் - 6 மாதங்களுக்குக் கூடியதும் ஒரு வருடத்திற்குக் குறைந்தது மான காலப்பகுதி- 2 புள்ளிகள்<br><br>வருடமொன்றிற்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 30 புள்ளிகள்<br><br>(அடிப்படைத் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்காக, சட்டத்தரணியொருவராகப் பணியாற்றிய 3 வருட சேவைக் காலம் நீங்கலாக)<br><br>(20 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்த சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது நீதிவான் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழொன்றின் மூலம் மேலதிக அனுபவம் நிரூபிக்கப்படல் வேண்டும்.) | | 30 |
| 4. | **தகவல் தொழில்நுட்ப அறிவு :**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் பட்டப்படிப்பிற்காக தகவல் தொழில்நுட்பப் பாடத்தை பிரதான பாடமாகப் பின்பற்றியிருத்தல் | 15 | 15 |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்துக்கு குறையாத அல்லது 1500 மணித்தியாலங்களைக் கொண்ட தகவல் தொழில் நுட்ப டிப்ளோமா பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில் நுட்பச் சான்றிதழ் பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல்<br><br>- 6 மாதங்கள்/720 மணித்தியாலங்கள்<br>- 3 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | <br><br>07<br>05 | |
| 5. | ஆங்கில மொழியில் தேர்ச்சி :<br>ஆங்கில மொழியில் பின்பற்றப்பட்ட பட்டம்/பட்டப்பின் படிப்புப் பட்டம்/ சட்ட முதுமாணிப் பட்டம்/சட்டமாணிப் பட்டம் (குறித்த பரீட்சை வினாத்தாள்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழியில் விடை அளித்திருத்தல் வேண்டும்). | 15 | 15 |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான டிப்ளோமா பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் (1 வருடம் அல்லது 1,500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல்<br><br>- 6 மாதங்கள்/720 மணித்தியாலங்கள்<br>- 3 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | <br><br>07<br>05 | |
| 6. | நேர்முகப் பரீட்சையின்போது வெளிப்படுத்தும் திறமை | | 05 |
| | மொத்தம் | | 100 |

7. **விண்ணப்பதாரிகளின் ஆள் அடையாளம்**.- சகல விதத்திலும் பூர்த்தியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது எல்லாச் சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளையும், அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப் படும் :-

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. (அ) விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை 2015.10.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :

செயலாளர்,
காணி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

(ஆ) இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்ப தாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை A4 அளவிலான தாளின் இரண்டு பக்கங்களையும் பாவித்து முதலாவது பக்கத்தில் 1 தொடக்கம் 11 வரையும் இரண்டாம் பக்கத்தில் மீதியும் வருமாறு தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''காணி அமைச்சின் சட்ட அலுவலர் பதவி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் அல்லது 22,935 ரூபா மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரசாங்க நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்கங்களை தமது திணைக்களத் தலைவரூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஊ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல்**.- நீங்கள் பூர்த்திசெய்து அனுப்பும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பிற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப் படும். வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பிற்கு பின்னர் தெரியவரும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்பும் அல்லது நிரப்பாமல் இருக்கும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரியது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
காணி அமைச்சு.

செயலாளர்,
காணி அமைச்சு,
''மிஹிகத்த மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2015.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி அமைச்சு**

சட்ட அலுவலர் பதவி

| |
|---|
| இல. : |
| (அலுவலக உபயோகத்திற்கு மட்டும்) |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. தொலைபேசி இல. :----.

4. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

5. பால் (ஆண்/பெண்) :----.

6. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கடைசித் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.

8. சட்டத்துறையில் பெற்றுக்கொண்ட பட்டம் தொடர்பான விபரங்கள் :

பல்கலைக்கழகம் :----.

பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.

மொழிமூலம் :----.

9. சட்டத்தரணியொருவராகச் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

10. சட்டத்தரணியொருவராக தொழில்சார் அனுபவம் :

வருடங்கள் :----.

11. பிற கல்வித் தகைமைகள் :

(i) :----.
(ii) :----.
(iii) :----.

12. மொழித்தேர்ச்சி (உரிய கூண்டினுள் ✓ அடையாளமிடுக.)

| | மிக நன்று | நன்று | சாதாரணம் | பலவீனம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

...................................... ஆகிய நான், இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானதும், சரியானதுமென உறுதியுரைக்கின்றேன். நான் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டோ அல்லது கருணை அடிப்படையிலான மாற்று வழியாக, வினைத்திறன் இன்மை காரணமாக சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டோ இல்லை என்பதையும், பதவியை விட்டு விலகிச் சென்றவராகக் கருதப்படவில்லை என்பதையும் உறுதியுரைக்கின்றேன். இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்களில் ஏதும் பொய்யானதென அல்லது பிழையானதென நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன் தெரியவரும் பட்சத்தில் நான் இப்பதவிக்கு நியமிக்கப் படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்பதையும், இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின் தெரியவரும் பட்சத்தில் எந்தவித நட்டஈடும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இங்கு கையொப்பமிட்டுள்ள .................................................... இல் வசிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் தமது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின்,
பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

15. **அரச சேவையில் உள்ளவர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

திரு./திருமதி/செல்வி ................................................... அவர்கள் இவ் அமைச்சில்/திணைக்களத்தில் .............................................. ஆக நிரந்தர/தற்காலிக/அமய ஊழியராகக் கடமையாற்றுகின்றார் என்பதையும், இவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை).

9-442

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

இலங்கை விவசாய சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2014)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.08.21 ஆந் திகதிய 1929 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விவசாய சேவையில் தரம் III இல் உள்ள பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2013 (2014) தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(i) **பந்தி 6.1.3** - "விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 22 இற்குக் குறையாமலும் 35 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதற்கு இணங்க, 1993.09.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும் 1980.09.21 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே இந்தப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெறுவார்கள்".

(ii) **பந்தி 9.3** - விண்ணப்பத்தில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி ஆகிய இரண்டு மொழிகளிலொரு மொழியில் காணப்படும் பரீட்சையின் பெயர் ஆங்கில மொழியிலும் அச்சிடப்படுவது அவசியமாகும். விண்ணப்பப்படிவங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு, 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 5 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். "இலங்கை விவசாய சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2014)" என விண்ணப்பப்படிவக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

செயலாளர்,
கமத்தொழில் அமைச்சு.

ரஜமல்வத்தை ஒழுங்கை,
பத்தரமுல்ல,
2015, செத்தெம்பர் 4.

9-447

## இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு "ஆ" மற்றும் வகுப்பு II பிரிவு "அ" வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2015

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பிற்கு இணங்க மேற்படி பரீட்சைகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சைகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அத்தகைய விதிமுறைகள் அவர்களினால் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றுக்கு அவர்கள் உட்படல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள், இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் வேறாக அச்சிடப்பட்டுள்ளன.

3. இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிப் படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தத்தம் விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அதன்படி அரசாங்க சேவையிலுள்ள இலங்கை தொழில்நுட்பவியல் சேவை அலுவலர்களாயின் தமது திணைக்கள தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரச சேவையிலுள்ள இலங்கை தொழில்நுட்பவியல் சேவை அலுவலர்களாயின் அவர்கள் சேவையாற்றும் மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **அடையாள அட்டைகள்.**- பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வண்ணம் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

5. **விண்ணப்பப்படிவம்.**- (i) "ஏ4" அளவிலான ஒரு தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இல. 1 முதல் 6 வரையிலான பந்திகளை முதலாம் பக்கத்திலும் ஏனையவற்றை மறுபக்கத்திலும் உள்ளடக்குதல் வேண்டும். விண்ணப்பங்களை தட்டச்சுசெய்து தயாரித்துக்கொள்ள முடியுமாயினும் அவை பரீட்சார்த்திகளின் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் தாம் இப்பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப் பங்களும், தகவல்கள் முழுமையாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பரீட்சார்த்தி தான் நிரப்பிய விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை பரீட்சார்த்தி சோதித்தறிதல் வேண்டும். அத்துடன், அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.

(iii) முதல் தடவையாக முழுப் பரீட்சைக்கு அல்லது ஒரு பாடத்திற்கு தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதற்கு அடுத்த தடவைகளில் அலுவலர்கள் முழுப் பரீட்சைக்கும் தோற்றுவதாயின் 400 ரூபாவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் 200 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவுவைக்கும்படி நாட்டின் ஏதாவதொரு பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் ஒன்றில் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை பரீட்சார்த்தி தன்னிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீள செலுத்தப்படமாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iv) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஊடகங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவர்களுக்குப் பொருத்தமான ஒரு ஊடகத்தினைத் தெரிவுசெய்தல் வேண்டும் என்பதுடன் அவர்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரே மொழியிலேயே வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும். அவர்கள் விண்ணப்பித்த ஊடக மொழியினைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) ஓர் அலுவலர் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே அமர்வில் தோற்ற முடியாது.

(vi) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II "ஆ" பிரிவில் உள்ள அலுவலர்கள் வகுப்பு II "ஆ" பிரிவிற்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

(vii) சேவையின் வகுப்பு II "ஆ" பிரிவிலுள்ள அலுவலர்களும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஐந்து வருடகால சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திய வகுப்பு II பிரிவு "ஆ" வின் அலுவலர்களும் வகுப்பு II பிரிவு "அ" வின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

6. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளார்கள் என்னும் எடுகோளின் பேரில் பரீட்சை முடிவுத் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ மொழி மூலம் விண்ணப்பிக்கும் பரீட்சை,

விண்ணப்பதாரியின் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் மற்றும் திணைக்களத் தலைவரின் உறுதியுரை என்பவற்றைக் குறிப்பிட்டு பொருத்தமுடையதாகவிருப்பின் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினையும் இணைத்து பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகளை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது கையொப்பத்தை உரியவாறு உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். பரீட்சைத் திணைக்களத்தினைத் தொடர்புகொள்ளும் வேளையில் பின்வருவன வற்றைத் தங்கள் கைவசம் வைத்துக்கொள்வது பயனுடையதாகும். அதாவது, தங்கள் கைவசமுள்ள விண்ணப்பப்படிவம், பற்றுச்சீட்டு ஆகியவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள், பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளியேயுள்ள பரீட்சார்த்தியாயின், அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஏனைய விபரங்களுடன் கோரிக்கைக் கடிதம் ஒன்று பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் ஒன்றுக்கூடாக அனுப்பப் படல் வேண்டும்.

7. மேற்படி (6) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

8. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாகவும் ஒவ்வொன்றுக்கும் வேறுபட்ட அமர்வுகளிலும் தோற்ற முடியும். எனினும் சித்திபெறுவதற்காக ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

9. **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்**.- இலக்கம் 3 இன்கீழ் மாகாண அரச சேவை அலுவலர்களின் பெறுபேறுகள் உரிய மாகாண அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளர்களுக்கும், அரசாங்க சேவை அலுவலர்களின் பெறுபேறுகளை அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளருக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **பரீட்சைத் திட்டம்**.- (1) வகுப்பு II பிரிவு ''ஆ'' ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டதாக அமைந்திருக்கும் :

(1) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 01) — 100 புள்ளிகள்
(2) நிதி ஒழுங்குவிதிகள் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 02) — 100 புள்ளிகள்

அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (பாட இல.01) - பாடத்திட்டம்

இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் படும் :

| | |
|---|---|
| அத்தியாயம் II | - சேவைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் நியமனம் |
| அத்தியாயம் III | - இடமாற்றங்கள் |
| அத்தியாயம் IV | - மாதச் சம்பளம், தற்காலிக நிலை, நிரந்தரம் மற்றும் ஓய்வூதியங்களுக்கான உரித்துடைமை வழங்குதல் |
| அத்தியாயம் V | - விடுவிப்பு, முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்புதல், சேவையை முடிவுறுத்தல் |
| அத்தியாயம் VIII | - மேலதிக நேரப்படிகள், விடுமுறை நாட்களும், விடுமுறை நாட்களுக்கான சம்பளங்களும் படிகளும் |
| அத்தியாயம் XII | - விடுமுறை |
| அத்தியாயம் XIII | - புகையிரத ஆணைச்சீட்டுக்கள் |
| அத்தியாயம் XIV | - நாட்டினுள்ளே கடமை நிமித்தமான பிரயாணங்கள் |
| அத்தியாயம் XIX | - அரசாங்க வாசஸ்தலங்கள் |
| அத்தியாயம் XLVII | - பொது நடத்தையும் ஒழுக்கமும் |

நிதி ஒழுங்குவிதிகள் (பாட இல. 02) - பாடத்திட்டம்

இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் படும் :

(1) அத்தியாயம் I.- செலவின மற்றும் வருமான மதிப்பீடுகள், திரட்டு நிதி மற்றும் செலவுகளைத் திட்டமிடுதல், நிகழ்ச்சித் திட்டம் தயாரித்தல், வருடாந்த செலவு மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்கும் வடிவம், புதிய பிரேரணைகள், செலவு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் பொறுப்பு, செலவு மதிப்பீடுகளில் மாற்றங்கள் செய்தல் (நி. ஒ. 1-68 வரை)

(2) அத்தியாயம் III.- நிதி முகாமையும் வகைகூறலும், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள், அரசிறை கணக்கு அலுவலர்கள் கொடுப்பனவுக்காக அதிகாரமளித்தல், அங்கீகாரம் வழங்குதல், உறுதிப்படுத்தல் பணிகளை ஒப்படைத்தல் (நி. ஒ. 124-147 வரை)

(2) வகுப்பு II பிரிவு ''அ'' வைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும் :

(அ) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 03) — 100 புள்ளிகள்
(ஆ) நிதி ஒழுங்குவிதிகள் (காலம் : 2 மணித்தியாலயம்) (பாட இல. 04) — 100 புள்ளிகள்

அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (பாட இல. 03) - பாடத்திட்டம்

இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் பட்டிருக்கும் :

| | |
|---|---|
| அத்தியாயம் XV | - கல்வி, பயிற்சி அல்லது கடமை நிமித்தம் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணங்கள் |
| அத்தியாயம் XVI | - விடுமுறை பிரயாணங்கள் |

அத்தியாயம் XXIII - குறிப்பிட்ட வகை நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கும் அரசாங்க அலுவலர்கள் சம்பந்தமான விசேட சலுகைகளும் அதுபற்றிய நிபந்தனைகளும்

அத்தியாயம் XXIV - சம்பளக் கடன்களும் முற்பணங்களும்

அத்தியாயம் XXV - தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள்

அத்தியாயம் XXVII - கடிதத் தொடர்பு வழிமுறைகள்

அத்தியாயம் XXVIII - நிர்வாக நடைமுறைகளும் நியதிகளும்

அத்தியாயம் XXX - அரச அலுவலர்கள் மீதான அரசாங்கத்தின் அதிகாரங்கள்

அத்தியாயம் XXXIII - சட்ட ஆலோசனையும் சட்ட நடவடிக்கைகளும்

அத்தியாயம் XLVII - பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும்

அத்தியாயம் XLVIII - ஒழுக்காற்று நடவடிக்கை தொடர் பான விதிமுறைகள்

அலுவலர்களின் செயலாற்றுகை, மதிப்பீடுகள் பற்றிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் ஏற்புடையதாகும்.

நிதி ஒழுங்குவிதிகள் : பாட இலக்கம் 04 - பாடத்திட்டம்

இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் :

(1) அத்தியாயம் VI.- அரசாங்க நிதி முதலியவற்றிற்கான பொறுப்பு, முற்பணக் கணக்குகளும் வங்கிக் கணக்குகளும், உப படிவப் புத்தகங்கள், நிதி, முத்திரைகள் போன்றவை தொடர்பான தொகை மதிப்பீட்டுச் சபைகள், முற்பணங்கள், வங்கிக் கணக்குகள் (நி. ஒ. 315-396 வரை)

(2) அத்தியாயம் XIII.- வழங்கல்கள், வேலைகள் மற்றும் சேவைகள் : பெறுகைகள் மற்றும் ஒப்பந்தங்கள், வழங்கல்கள், பொருட்களின் பொறுப்பு மற்றும் சரிபிழை பார்த்தல், மேலதிக பொருட்கள் மற்றும் பயன்படுத்த முடியாத பொருட்கள் (நி. ஒ. 685 முதல் 775 வரை)

11. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின், பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

12. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதப்படக்கூடாது.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கு இடையில் யாதாயினும் உடன்பாடின்மைகள் காணப்படுமிடத்து சிங்கள மொழியிலான வாசகமே செல்லுபடியானதாக அமையும்.

ஜே. தடல்லகே,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும்
சனநாயக ஆட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2015, செத்தெம்பர் 3.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு 'ஆ' மற்றும் வகுப்பு II பிரிவு 'அ' வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2015**

## Efficiency Bar Examination Prescribed for Officers in Segment "B" and Segment "A" of Class II of the Sri Lanka Technical Service - 2015

(பிரிவு 'ஆ' மற்றும் 'அ' இரண்டு பிரிவுகளுக்குமாக ஒரே முறையில் விண்ணப்பிக்க முடியாது)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
[ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

தாங்கள் தோற்ற உத்தேசித்துள்ள பரீட்சை :
வகுப்பு II பிரிவு "ஆ" - 0
வகுப்பு II பிரிவு "அ" - 1
[ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :———.
(முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்)
(ஆங்கில பெரிய எழுத்தில்) உதா. :
(GUNAWARDHANA, M. G. B. S. K.)

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :———.

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ———.

2. அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :———.
(சிங்களத்தில்/தமிழில்) :———.
(பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

3. பால்: (ஆண்-0, பெண்-1)
[ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. தோற்றும் பாடம்/பாடங்கள் :
(வகுப்பு II "ஆ" பிரிவின் வகுப்பு II "அ" பிரிவின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்காக தோற்றும் பாடங்கள் (ஏற்புடையதாகாத சொற்களைக் கீறிவிடவும்)

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| ______ | |
| ______ | |

6. நீங்கள் மாகாண அரச சேவையைச் சார்ந்தவரா ? அல்லது அரச சேவையைச் சார்ந்தவரா ?

(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

(அரசாங்க சேவை – 10, மேல் மாகாண அரச சேவை - 1, மத்திய மாகாண அரச சேவை - 2, தென் மாகாண அரச சேவை - 3, வட மாகாண அரச சேவை - 4, கிழக்கு மாகாண அரச சேவை - 5, வடமேல் மாகாண அரச சேவை - 6, வடமத்திய மாகாண அரச சேவை - 7, ஊவா மாகாண அரச சேவை - 8, சப்பிரகமுவ மாகாண அரச சேவை - 9)

7. தொலைபேசி இலக்கம் :

8. (i) பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

(ii) 2015.10.19 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

9. (i) பதவிப் பெயர் :----.

(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பும் தரமும் ................ (II "அ"/ II "ஆ" என்ற வகையில் உள்ளடக்க வேண்டும்.) :----.

(iii) 2015.10.19 ஆந் திகதிக்கு அத்தரத்தின் சேவைக்காலம் : ----.

10. நீங்கள் சேவையாற்றும் திணைக்களம் :----.

> பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும்.
> (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.)

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை எனவும் மேலே குறிப்பிட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையவர் என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் பிரகடனப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக் களத்தில் அவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்றுள்ள அலுவலர் அல்லது தமது பிரதேச தலைவர் முன்னிலையில் விண்ணப்ப தாரர் தனது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி ......................... ........................... என்பவர் ................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப் பட்டுள்ளதென்றும் அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையின் மூலம் உறுதிப்படுத்தவும்).
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

மேலே இல. 1 முதல் 11 வரையான பந்திகளில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப்பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்றும் அவரால் தரப்பட்டுள்ள மொழிமூலத்தில் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.
(உத்தியோகபூர்வ முத்திரையின் மூலம் உறுதிப்படுத்தவும்).

திகதி :----.

9-445

---

## ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2015, செத்தெம்பர்

2014.10.11 ஆந் திகதிய 1883/ 17 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும் நிர்வாக தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு வருடங்களினுள் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2015.10.25 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் அனுமதி அட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

*2. **தகைமைகள்**.-* உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப் படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத்திணைக்களப் பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத நிர்வாக தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

*3. **விண்ணப்பங்கள்**.-* இச்சுற்றுநிருபத்தில் இறுதியில் குறிப்பிடப் பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை போன்று விண்ணப்பதாரிகளி னால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2015.09.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத் தலைவரிடம் பாரமளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுப்படுத்தியபின் விண்ணப்பமானது ''சுகாதார அமைச்சு, கொழும்பு 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, 'சுவசிரிபாய கட்டிடம்', பணிப்பாளர் (பரீட்சை)'' அவர்களுக்கு 2015, செத்தெம்பர் 25 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 35.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவுள்ள கடித உறையொன்றும் அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

***கவனிக்கவும்**.-* மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்பக்கத்தில் இலக்கம் 1-4 (உ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 4(ஊ)-8 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

*4. **பரீட்சைக் கட்டணம்**.-* (i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்களிக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடியற்றதாக்க வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

*5. **பரீட்சைக்கு உட்படுத்திக்கொள்தல்**.-* (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்காத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப் படமாட்டார்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் ;
(ஈ) வலுவுள்ள கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்காதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்). (சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk).

*6. **பரீட்சைத் திட்டம்**.-* இப்பரீட்சை மூன்று எழுத்து மூல வினாப் பத்திரங்களையும் சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சையொன்றையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

*7. **பரீட்சைப் பாடத்திட்டம்**.-*

*7.1 **எழுத்துப் பரீட்சை***

7.1.1 தாபனவிதிக்கோவை

(நேரம் : 2 மணித்தியாலம்) 8 வினாக்களில் 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம்

(i) சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக் களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்
(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகள்.
(iii) தாபனவிதிக்கோவை

I ஆம் பிரிவு.- VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII அத்தியாயங்கள்.

II ஆம் பிரிவு.- XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பன வற்றின் நிர்வாகம்

(நேரம் : 1 1/ 2 மணித்தியாலம்) 7 வினாக்களில் 4 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

மொத்தப் புள்ளிகள் 100.

பாடவிதானம்

சுகாதாரக் கைநூல்

(i) வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்
(ii) ஆய்வுகூட முகாமைத்துவம்
(iii) மருந்து முகாமைத்துவம்

7.1.3 கணக்கியல் :

(நேரம் : 2 மணித்தியாலம்) 7 வினாக்களில் 4 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,

மொத்தப் புள்ளிகள் - 100.

பாடவிதானம்

(i) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி.

(iii) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணம்.

நிதிப் பிரமாணம் -

I ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 1, 2, 78

II ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119

III ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189

V ஆம் அத்தியாயம் -நிதிப்பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260

VI ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394

VII ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 488, 493

XIII ஆம் அத்தியாயம் - நிதிப்பிரமாணம் 715, 716, 756, 757, 758

பெறுகை வழிகாட்டிகள் -

1 ஆம் அத்தியாயம் - அனைத்துப் பிரிவுகளும்
2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8
3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.2 ***சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை.***- சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும் பொழுது மேலோங்கும் நிகழ்வுகளின் பொருட்டு சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல்.

8. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் பிரிவில்/ விசேட இயக்கத்தில்/ நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலில் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

எம். பீ. எல். ரகுமான்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II,
சுகாதார மற்றும் சுதேச வைத்திய
அமைச்சின் செயலாளருக்காக.

சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2015, செத்தெம்பர் 3.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பிரயோகத்தின் பொருட்டு)

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2015, செத்தெம்பர்**

1. (அ) (i) விண்ணப்பதாரரின் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) : -----.

(ii) விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) :-

(iii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

(iv) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்தில்) :-

(ஆ) பதவி :

(i) வைத்திய உத்தியோகத்தர் :

பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்) :

(ii) தகுதிகாண் கால நியமனம் பெற்ற திகதி :-----.

(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி/தரம் II:-----.

2. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் "✓" அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் "X" குறியை இடவும்.

வைத்தியசாலைகள் மருந்துச் சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம்

தாபன விதிக் கோவை

கணக்கியல்

சிங்களம் வாய்மொழி ☐ தமிழ் வாய்மொழி ☐

3. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

(உரிய கூட்டினுள் "✓" அடையாளத்தை இடவும்.

4. (அ) தற்பொழுது சேவையாற்றும் இடம் :-----.

(ஆ) அதற்குரிய மாவட்டம் :-----.

(இ) கையடக்கத் தொலைபேசி இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- (தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூண்டினுள் சரி "✓" அடையாளமிடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | |
| குருநாகல் | | அநுராதபுரம் | | இரத்தினபுரி | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | |
| அம்பாறை | | வவுனியா | | | |

(ஈ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9'' × 4'' அளவுள்ள 35 ரூபா பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறையொன்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(உ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) : -----.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.

5. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? :-----.

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :-----.

முத்திரைக் கூடு (முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக.)

6. **விண்ணப்பதாரரின் உறுதியுரை**.- எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/முதன் முறை அல்லாத படியால் .......... ரூபா பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்து செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

7. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி .................................................. என்பவரை நான் நன்றாக அறிவதுடன், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாதபடியால் ............ ரூபா பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங் களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

8. **பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/ விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ........................................... என்பவர் ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்/பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது பிரிவில்/இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட இயக்கத் தலைவரின் கையொப்பம் (முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.

(*தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

9-482

## திருத்தம்

### "கள/அலுவலக உத்தியோகத்தர் பிரிவு 2 இன் சேவை வகையில் (MN 05 - 2006A) இருதய, நுரையீரல் செயற்பாட்டு அவதானிப் பாளர் தரம் II பதவிக்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு"

மேற்படி தலைப்பில் 2015.08.14 ஆந் திகதிய 1928 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு மேலதிகமாக-

இருதய நுரையீரல் செயற்பாட்டு அவதானிப்பாளர் பதவி தாதியர் சேவையின் பதிவியுயர்வு ஒன்றல்ல என்பதுடன், அதன் பிரகாரம் இருதய நுரையீரல் செயற்பாட்டு அவதானிப்பாளர் பதவியானது புதிய ஆட்சேர்ப்பு என்பதைக் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

மேலும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2015.09.11 எனக் குறிப்பிடப்பட்டுள்ள திகதி 2015.09.25 என திருத்தம் செய்யப்படல் வேண்டும் என்பதையும் தயவுடன் அறியத்தருகிறேன்.

கலாநிதி டி. எம். ஆர். பி. திசாநாயக்க,
செயலாளர்,
சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

9-399

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.